தைத்த ஆடைகளின் உற்பத்தியிலே ஈடுபட்டுள்ளன. அத்தகைய கைத்தொழில்கள் மேலும் விரிவாகின் ஏற்றுமதிப் பிரச்சினைகள் ஏற்படுமாகையால் கொ. பெ. பொ. ஆ. குழு 1979 இல் அத்தகைய கைத்தொழில் ஊக்குவித்தலை தவிர்த்துள்ளது.

கொ. பெ. பொ. ஆ. குழுவுக்கு புறம்பான வெளிநாட்டு முதலீடுகளை வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு மேற்பார்வை செய்கிறது. அது முன்னைய ஆண்டில் செய்த 21 ஒப்புதல்களுக்கு எதிராக இவ்வாண்டு காலத்தில் 113 கைத்தொழில்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இவற்றில் ஏறக்குறைய 61 தயாரிப்புத் துறையைச் சார்ந்தவைகளாகும். கைத்தொழில் திட்டங்களின் மொத்த முதலீடு ரூ. 9,710 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1979 இல் ஒப்புதல்கள் அளிக்கப்பட்ட கைத்தொழில் திட்டங்களில் பெரும்பான்மை புடவை, ஆடைகள், கயிறு உற்பத்திகள் இறப்பரும் உலோக உற்பத்திகள் ஆகிய வகையினவாக நிகழ்ந்தன. பல திட்டங்களில் ஏற்றுமதி வாய்ப்புக்கள் ஏறக்குறைய 100 சதவீதத்திற்கு உயர்ந்து காணப்பட்டன. ஆயினும் இவற்றில் நான்கிலொரு பங்கு திட்டங்களே வெளிநாட்டு கூட்டு உடன்படிக்கைகளின் அடிப்படையில் உறுதியான முதலீடுகளை மேற்கொள்வதில் முனைந்துள்ளன.

உள்நாட்டு முதலீட்டு ஒப்புதல் தொடர்பான அமைச்சுக்களுக்கு இடையில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக கைத்தொழில் அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத்தொழில்கள், கடற்றொழில் கிராம கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களுக்கென தனியான உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழு (உ. மு. த. கு.) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டின் 2,385 ஒப்புதல்களுடன் ஒப்பிடுகையில் 1979ஆம் ஆண்டில் 1,803 புதிய முதலீடுகள் இவற்றால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. இவற்றின் நிதிப் பொறுப்புக்கள் ஏறக்குறை ரூ. 87,50 இலட்சமாக மதிப்பிடப்பட்டது டன் ஏறக்குறைய 33,000 பேருக்கு மேலதிக தொழில் வாய்ப்பினை வழங்கும் ஆற்றலினையும் கொண்டிருந்தன. மேலும் ஒப்புதல்களின் பெரும்பான்மை புடவையும் ஆடையும் அவை சார்ந்த கைத்தொழில்களாகவும் விளங்கின.

**விலைகள்**

1979 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்[1] சராசரி 1978 இன் 2 சதவீத அதிகரிப்புக்கும் 1977, 1976ன் ஒரு சதவீத அதிகரிப்புக்கும் எதிராக 11 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. குறிப்பிட்ட இடங்களில் எண் அடிப்படையில் இக் குறிகாட்டியானது 1979 திசெம்பரில் 1978 இன் அதே காலப்பகுதியின் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் முந்திய ஆண்டின் அதே மாதத்திலும் பார்க்க 15 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

---

1. குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினரால் ஆக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மத்திய வங்கி மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் விலை மட்டத்தில் எற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு கிடைக்கற்பால வெளியிடப்படும் குறிக்காட்டிகளாகும். கொழும்பு நுகர்வோா விலைச் சுட்டெண் சில்லறை விலைகளின் போக்குகளை அளவிடுகையில் மொத்த விற்பனை விலை குறி காட்டி ஆரம்ப சந்தை மட்டத்தில் விலைகளை அளவிடுகிறது. முந்திய ஆண்டறிக்கையில எடுத்துக்காட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைக்காட்டியின் குறைபாடுகள் இன்னமும் திருத்தப்படவில்லையாதலால் பொருளாதாரத்தின் சில்லறை விலைகளின் போக்குகளை திருப்திகரமாக விளக்கமுடியாதிருக்கின்றது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 = 100

1975 ஆண்டு தோறும் 1976 தொடக்கம் மாதாந்தம்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிகாட்டியின் பண்ட வகையான பகுப்பு 1979 இன் 30 சதவீத அதிகரிப்புக்கு உள்ளூர்ப் பண்டங்களின் அதிகரித்த விலைகளே காரணமாகும். அதே வேளையில் இறக்குமதி ஏற்றுமதி விலைகளில் முறையே 55 சத வீத 7 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. மேலும் குறிகாட்டியைப் பகுப்பாய்வு செய்யின் அது உணவு முத்திரைத் திட்ட அறிமுகப்படுத்தலுடனும், செத்தெம்பரில் அரிசி, சீனி, பால்மா, மண்ணெண்ணெய் என்பவற்றிற்குரிய விலை உதவுதொகைகள் மீளப் பெறப்பட்டமையும் ஒகத்திலும் ஒத்தோபரிலும் கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலைகளில் மேல்நோக்கிய மாற்றம் செய்யப்பட்டமையும் சுட்டெண்ணில் 64 சதவீத அதிகரிப்பிற்கு வழிவகுத்தது உதவித் தொகையற்ற விடயங்களின் விலைகளில் அதிகரிப்புத்தாக்கம் மிகுதி அதிகரிப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டன. மத்திய வங்கியின் 12 மாதங்களுக்கான சராசரி மொத்த விற்பனை விலைச் சுட்டெண்[1] முந்திய ஆண்டின் 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பீடுகையில் 1979 இல் 9 சதவீதத்தால் அதிகரித்தது. இது கடந்த ஆண்டின் அதே மாதத்திற்கு மேலாக 1979 திசெம்பரில் 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. அத்துடன் 1978 இன் தொடர்பான காலப்பகுதியும் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. 1979இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கு பெரும்பாலும் தேயிலை விலை வீழ்ச்சியே காரணமாக அமையும். இது சுட்டெண்ணில் 11 சதவீதத்தைக் கொண்டுள்ளது. நிலையான விலைகளில் (1970) மொத்தத் தேசிய உற்பத்திக்கு நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதமான உள்ளடக்கமான விலைச் சுட்டெண் (மொ. தே. உ. குறைவுபடுத்தி) முந்திய ஆண்டில் இருந்த அதே வீதமான 15 சத வீதத்தால் அதிகரித்தது.

1979 இல் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் ஆண்டில் முதல் அரைப்பகுதி தொடர்பான விலை நிலையானதன்மை விரைவான அதிகரிப்புடைய காலப் பகுதியொன்றினுல் தொடரப்பட்டதேயாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் முதல் இரு காலாண்டுகளிலும் ஒவ்வொரு சத வீதத்தால் அதிகரித்தது. மூன்றும் நாலாம் காலாண்டுகளில் முறையே 4, 8 சதவீதங்களால் அதிகரித்து, ஆண்டின் பின் அரைப்பகுதியில் விலை மட்ட அதிகரிப்பின் விரைவான போக்கினைக் காட்டியது. மறுபுறத்தில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1979 இன் முதல் அரைப்பகுதியில் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இது நடு ஆண்டு மட்டத்திலும் பார்க்க 23 சதவீதத்தால் கூடிய அதிகரிப்புற்றது.

செத்தெம்பரில் விலை உதவு தொகைகள் மீளப் பெறப்பட்டமை மாவின் விலையை இரு நிலைகளில் அதிகரித்தமை, பெற்றோலிய பொருட்களின் விலை அதிகரிப்பு சிறு போகத்தில் மிகக் குறைந்த அறுவடை நிலவியமை சனவரி, செத்தெம்பரில் கூலி அதிகரிப்பு ஏற்பட்டமையும் பண நிரம்பல் 1978 இன் 11 சதவீதத்திலும் 1979 இல் 29 சதவீதம் கொண்ட உயர்ச்சியைக் கொண்டிருந்தமை என்பன விலைகளில் ஏற்பட்ட தாக்கத்தைக் குறைக்க ஏதுவாக இருந்த ஏனையகாரணிகளால் ஓரளவு ஈடு செய்யப்பட்டது. இவை கட்டற்ற வர்த்தக

---

1. உற்பத்திப் பொருள் ஒன்றுக்கான தொடக்கச் சந்தைப்படுத்தல் அவ்வுற்பத்தியின் விற்பனைத் தொடர்ச்சியின் முதலாவது முக்கிய வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படலாம். எனவே, மொத்த விற்பனை விலையென்பது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தியானது விலையையும் இறக்குமதி செய்யப்பட்ட பொருளின் இறக்குமதி விலைகளையுமே குறிக்கும். எனவே வழமையான உரையாடலில் குறிப்பிடும் மொத்த விற்பனை விலைகளில் இருந்து இவை வேறுபடுவனவாகும்.

கொள்கையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அதிகரித்த நிரம்பல், இறக்குமதி விநியோக வர்த்தகத்தில் கூடிய போட்டி வர்த்தக வாகனங்களின் இருப்புத் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் போக்கு வரத்துச் சாதனங்களின் சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கும்.

மொத்தத்தில் மிதமான அறிகுறிகள் இருந்த முந்திய ஆண்டின் எதிர் பார்ப்புக்களை உண்மையற்றதாக்கி, 1979 இல் பொருளாதாரத்தில் பணவீக் கம் விரைவுபடுத்தப்பட்டதாகத் தோன்றியது. இடைக்கற்பால சிறந்த தரவு 1979 இல் சென்ற ஆண்டின் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 20 சத வீதமள விற்கு பொதுவான விலை அதிகரிப்பைக் குறிக்கின்றது. நாணய வளர்ச்சியில் துரித விரைவுபடுத்தலும், எதிர்பாராத வரவு செலவுத்திட்டக் குறையும் ஆண்டின் இறுதி பகுதியில் முழுத் தாக்கத்தைக் கொண்டிருந்தன. விலைப்பக்கத் தில் மீட்பு அம்சம் ஒன்று யாதெனில் விலைச் சுட்டெண்ணின் பதிவு செய்யப் பட்ட அரைவாசி அதிகரிப்பிற்கு அரசாங்கம் நிருவகித்த விலைகளில் ஏற்படுத் தப்பட்ட மாற்றங்கள் கூலி அதிகரிப்பினால் மட்டியல் நிலைப்படுத்தப் பட்ட வாழ்க்கைச் செலவுத் தாக்கம் உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் அதிகரித்த நலனளித்தற் கொடுப்பனவுகள் என்பவை காரணமாகும்;

விலைக் கட்டுப்பாடுகளும் பங்கீடும்

1979 இன் கட்டற்ற பொருளாதாரம் இறக்குமதி பங்கீட்டு வர்த்தகத்தின் அதிகரித்த போட்டித் தன்மைகளைக் கொண்டிருந்தமையோடு சந்தை விலைகளை யும் நுகர்வுப் பொருட்களின் கிடைப்பனவையும் ஒழுங்குபடுத்த உதவும் கருவி யாக பங்கீடும் விலைக் கட்டுப்பாடுகளும் தேவையற்றவையாகிவிட்டன. ஏறக் குறைய நாற்பது ஆண்டுகள் நடைமுறையிலிருந்த அத்தியாவசியப் பொருட் களின் பங்கீடு 1979 இல் நீக்கப்பட்டிருக்கையில், விலைக்கட்டுப்பாட்டின்கீழ் விடயங்களின் நிரலுக்கு புதியன சேர்க்கப்படவில்லை. பங்கீட்டு முறையை நீக் கியதன் விளைவாக உணவு விடயங்களின் உயர்ந்த விலைப்பழுவினை ஈடுசெய்யும் சலுகை முறையாக அரசாங்கமானது உணவு ஆதரவுத் திட்டம், உணவு முத் திரைத் திட்டம் - விபரங்கள் முன்பு தரப்பட்டன - என்பவற்றைப் புகுத்தியது. 1979 இல் கோதுமை மா, பாண், பருப்பு (அவரை இனம்) சில பால்வகை, குழந்தை உணவு வகைகள் போன்றவற்றின் கட்டுப்படுத்தப்பட்ட விலைகள் உயர்த்தப்பட்டன.

1979 இல் மற்றைய முக்கிய கொள்கை மாற்றம் யாதெனில் சனவரியில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஆக்கப்பட்டதேயாகும் இச்சட்டவாக்கத் தின் நோக்கம் இன்றியமையாப் பண்டங்களின் பங்கீட்டினை ஒழுங்குபடுத்தலாகும். இச்சட்டம் விலையைக் குறிப்பிடல், பெயர் விபரச் சிட்டையிடல், பொதிப்படுத் தல், தரக்கட்டுப்பாடுகள், குறிக்கப்பட்ட விடயங்கள் பதுக்குவதைத் தடை செய்தல், ஆகக்கூடிய பட்ச விற்பனை விலையை பார்வைக்கு வைத்தல், மற்றும் நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்கான ஏனைய வழிமுறைகள் என்பனவற்றிற்கு ஏற்பாடு செய்தது இகாலிடையில் தேசிய விலை ஆணைக்குழு தொடர்ந்தும் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பொருட்களின் விலைகளை மீளாய்ந்து விதந் துரைகள் அளித்தது. இவ் விதந்துரைகள் உற்பத்தியாளர்களை அல்லது விற்பனை யாளர்களை சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்துவனவல்ல. அவை சந்தையில் நியாயமற்ற விலை அதிகரிப்பின்மேல் பாதகமான தாக்கத்தை உண்டுபண்ணின.